<u>Spl.CC No. 1/2025</u> தேதி 09.09.2025.

அ.சா. 13 – பூமிநாதன்

<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி –</u>

அசா 2 புகார் மனுவில் சொன்ன விசயங்களை என்னிடம் சொல்லவில்லை என்றும், அசாஆ 2 புகார் மனு என்னால் தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேல் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று பூர்வாங்க விசாரணை நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதன்பின்னர் அனுமதி பெற்று பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

அசா 2 சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ரூ. 25 ஆயிரம் ஆஜர்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. மாதிரி கரைசல் பரிசோதனை நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளுக்கு அறிவுரைகள் என்னால் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

அரசு சாட்சிகள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வரவழைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. ஒப்படைப்பு மகஜர் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு முதல் விசாரணையில் கூறியபடி நாங்கள் செல்லவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியபடி அசா 2ம் அரசு சாட்சியும் நகராட்சி அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றும், முதல் விசாரணையில் சொன்னவாறு 1,2ம் எதிரிகளை சந்திக்கவில்லை என்றும், அசா2 ஆனவர் 2ம் எதிரியிடம் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

1,2 எதிரிகள் அசா 2 யிடம் எந்த பணமும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னபடி 2ம் எதிரியை அசா 2 அடையாளம் காட்டியதாகவும், அதன்பேரில் 1ம் எதிரியிடம் விசாரித்ததாக

சொல்வது பொய் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதுபோல் பணம் 2ம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த வகைக்கு கரைசல் பரிசோதனை நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்தொடர்ச்சியாக 1, 2ம் எதிரிகளை காவல் துணைக்கண்காணிப்பாளர் கைது செய்வதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதன்பின் தொடர்ச்சியாக அசாஆ 6 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆகிய ஆவணங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆகிய ஆவணங்கள் குற்ற செய்கை நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்தின் உண்மைத்தன்மையை பிரதிபலிக்கவில்லை என்றால் சரியல்ல. சா.பொ.1 முதல் சா.பொ.3 வரையிலான பாட்டில்களில் அடங்கிய கரைசல்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

அசாஆ 9 மற்றும் அசாஆ 10 ஆகிய சோதனை ஜாபிதாக்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் அலுவலகத்தில் இருந்து ஆவணங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

அசாஆ 2 தொழில் போட்டியின் காரணமாக சொன்ன தகவலை நான் ஊழல் தடுப்பு குற்ற வழக்காக மாற்றிவிட்டேன் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல.

அசா 2 சோமசுந்தரன் அருப்புக்கோட்டை நகராட்சியின் பட்டியலிடப்பட்ட ஒப்பந்தக்காரர் கிடையாது என்று சொன்னால் சரிதான். ஆனால் பட்டியலிடப்பட்ட ஒப்பந்தக்காரர் திரு.சுப்பாரெட்டியாரிடம் பணி செய்யும் பணியாளர் ஆவார். அசா 2 சோமசுந்தரன் மேற்படி சுப்பாரெட்டியாரிடம் மட்டும் ஒப்பந்த பணி செய்யும் நபராக இருந்தாரா அல்லது வேறு ஒப்பந்தக்காரரிடமும்

அவ்வாறு பணி செய்யும் நபராக இருந்தாரா என்றால் அசா 12 சுப்பாரெட்டியாரிடம் மட்டும் தான் பணி செய்தார். நான் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக பூர்வாங்க விசாரணை முடிவடைந்த பின்னர் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் எங்களது துறை கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எங்களது துறை கையேட்டின் படி 1ம் எதிரி A வகை அரசு அதிகாரியாக வரையறுக்கப்பட்டுள்ளாரா என்றால் B வகை அரசு அதிகாரியாக வரையறுக்கப்பட்டுள்ளார். B வகை அரசு அதிகாரிகள் மீது முதல் நிலை விசாரணை முடிவடைந்த பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக எந்த உயர் அதிகாரியிடம் நான் அனுமதி பெற வேண்டும் என்று எங்களது துறை கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் பொறி வைப்பு வழக்குகள் தவிர இதர வழக்குகளுக்கு துறை கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் நடைமுறை கடைபிடிக்கப்படுகிறது. ஊழல் தடுப்பு துறையால் வெளியிடப்பட்டுள்ள கையேட்டில் Part III வழிகாட்டு எண் 15ல் குறிப்பிட்டுள்ளபடி முதல்நிலை விசாரணை ஊழல் துறை தடுப்பு இயக்குனரின் அனுமதியின் பேரில் தான் நடத்தப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் முதல் நிலை விசாரணை நடத்துவதற்கு இயக்குனரின் அனுமதி பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அனுமதி பெறப்பட்டுள்ளது. அதேபோல் முதல் நிலை விசாரணை முடிவடைந்த உடன் உரிய அதிகாரியிடம் அனுமதி பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைக்கு முன்பாக நான் யாரிடம் அனுமதி பெற்றேன் என்று சொன்னால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்காக அனுமதி வழங்கியவுடன் மற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். வழிகாட்டுதல் எண் 43 ன்படி C மற்றும் D வகைப்படுத்தப்பட்ட அரசு ஊழியர்கள்

மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைகள் துவங்குவதற்கு முன்பாக காவல் கண்காணிப்பாளர் / கூடுதல் மற்றும் துணை இயக்குநர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அதிகாரியிடம் தனியாக அனுமதியும், A and B வகைப்படுத்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு இயக்குநரிடம் அனுமதியும் தனியாக பெறவேண்டும் என்று சொன்னால் நாங்கள் காவல் கண்காணிப்பாளரிடம் மட்டுமே அனுமதி பெறுவோம். மற்ற நடவடிக்கைகளை காவல் கண்காணிப்பாளர் மேற்கொள்வார்.

முதல் நிலை விசாரணை நடத்துவதற்கு தனியாக அனுமதியும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு தனியாக அனுமதியும், பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பாக தனியாக சம்மதமும் பெறவேண்டும் என வழிகாட்டுதலில் வரையறுக்கப்பட்டுள்ளதால் நான் பெற்றுக்கொண்ட அனுமதிகள் எனக்கு முதல் விசாரணையில் சொன்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த அனுமதியும் வாங்கவில்லை என்றும், ஆவணங்களை நானே தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. முதல் நிலை விசாரணைக்கு என தனியாக பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றால் சரிதான்.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.